தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 143 | 4 Pages | 21.12.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 143 | 4 பக்கங்கள் | 21.12.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாந் தரும்**
**விளக்கம்:**
**அறமாகிய செயல் எது என்றால் ஒரு உயிரையும் கொல்லாமையாகும், கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளைக்கும்.**

# 2வது கோடி பயனாளிக்கு மருந்து பெட்டகம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

ஈரோடு, டிச.21

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒவ்வொரு மாவட்டமாக சென்று வளர்ச்சித் திட்டங்கள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வருகிறார். மேலும் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறார். அதன்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோடு மாவட்டத்திற்கு 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் வகையில் இன்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தார்.

அங்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனையடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கார் மூலமாக ஈரோட்டுக்கு கிளம்பினார். ஈரோடு மாவட்ட எல்லை பகுதியான விஜயமங்கலம் சுங்கச்சாவடி பகுதியில் தமிழக வீட்டு வசதித்துறை அமைச்சர் முத்துசாமி, வடக்கு மாவட்ட செயலாளர் நல்லசிவம் தலைமையில் ஈரோடு தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பின்னர் பெருந்துறையில் முதலமைச்சர்மு.க.ஸ்டாலினுக்குதி.மு.க சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சாலையின் இருபுறமும் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் திரண்டு நின்று முதலமைச்சரை வரவேற்றனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொதுமக்களை பார்த்து கையசைத்தவாறு சென்றார். இவ்வாறாக 20 இடங்களில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து நஞ்சனாபுரம் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் 2021ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம் சாமண பள்ளியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் தொடங்கப்பட்ட மக்களை தேடி மருத்துவ திட்டத்தின் 2 கோடியாவது பயனாளியான அதே பகுதியை



சேர்ந்த சுந்தராம்பாளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மருந்து பெட்டகங்களை வழங்கினார்.

இந்த திட்டத்தின்படி பயனாளிகளின் வீடுகளுக்கே சென்று மருந்து பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் 2 மாதங்களுக்கு தேவையான மருந்துகள் இருக்கும். இந்த திட்டத்தின் 50வது லட்சம் பயனாளிக்கு சித்தலம்பாக்கத்தில் நடந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மருந்து பெட்டகம் வழங்கினார். 60வது லட்சம் பயனாளிக்கு மைட்டாபட்டியிலும், 75வது லட்சம் பயனாளியான நாமக்கல் மாவட்டம் போதமலையிலும், 80வது லட்சம் பயனாளிக்கு சைதாபேட்டையிலும், 90வது லட்சம் பயனாளிக்கு சென்னை விருகம்பாக்கத்திலும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருந்து பெட்டகம் வழங்கினார்.

1 கோடியாவது பயனாளிக்கு திருச்சியில் நடந்த விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மருந்து பெட்டகம் வழங்கினார்.

இந்த திட்டத்தை பாராட்டி ஐ.நா.சபை சமீபத்தில் விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியை முடித்து விட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோடு காளிங்கராயன் அரசு விருந்தினர் மாளிகைக்கு சென்று அங்கு சிறிது நேரம் ஓய்வு எடுக்கிறார்.

அதைத்தொடர்ந்து மாலை 5 மணிக்கு ஈரோடு, மேட்டுக்கடை பகுதியில் உள்ள தங்கம் மகாலில் நடைபெறும் தி.மு.க கட்சி நிர்வாகி கூட்டத்தில் பங்கேற்கிறார். இதில் பங்கேற்கும் கட்சி நிர்வாகிகளுக்கு பல்வேறு கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. அடையாள அட்டை இருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் வளர்ச்சி குறித்தும், நிர்வாகிகள் கருத்துகளையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டறிகிறார். அதைத்தொடர்ந்து மாலை 6 மணிக்கு பெருந்துறை ரோடு, முத்து மகாலில் நடைபெறும் தி.மு.க மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் இல்ல திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார். இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார். பின்னர் இரவில் காலிங்கராயன் விருந்தினர் மாளிகைக்கு சென்று முதலமைச்சர் ஓய்வு எடுக்கிறார்.

நாளை (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு காளிங்கராயன் விருந்தினர் மாளிகையிலிருந்து கிளம்பி செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சோலார் புதிய பஸ் நிலையம் வளாகத்தில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்று பொது

மக்கள் மத்தியில் பேசுகிறார். ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தில் 434 கிராமங்கள் குடிநீர் பெறும் வகையில் ரூ.482 கோடியில் நிறைவேற்றப்பட்டுள்ள கூட்டு குடிநீர் திட்டத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

தமிழ்நாடு வீட்டு வசதித்துறை சார்பில் ரூ.25 கோடி மதிப்பில் சூரம்பட்டி நால் ரோட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அலுவலகம், கடைகள் மற்றும் வீடுகளை திறந்து வைக்கிறார். நகர்ப்புற வாழ்விட குடியிருப்பு திட்டத்தில் கோபி, சத்தியமங்கலம், பவானி உள்ளிட்ட 4 இடங்களில் ரூ.10.4 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், ரூ.59.60 கோடியில் 4 வழிச்சாலையாக விரிவாக்கம் செய்யப்பட்ட ஈரோடு ரிங் ரோடு, ரூ.20 கோடியில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள கரூர் ரோடு, ஈரோடு பஸ் நிலைய புதிய வணிக வளாகம், பவானிசாகரில் தியாகி எம்.ஏ.ஈஸ்வரன் மணி மண்டபம் மற்றும் உருவசிலை என மாவட்டம் முழுவதும் ரூ.951 கோடியே 20 லட்சம் செலவில் முடிவுற்ற 559 பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கிறார்.

இதைப்போல் சோலார் ஒருங்கிணைந்த காய்கறி, பழங்கள் மற்றும் மளிகை சந்தை, தியாகி பொல்லான் அரங்கம் மற்றும் சிலை உள்பட மாவட்டம் முழுவதும் ரூ.133 கோடியே 66 லட்சம் செலவில் புதிய வளர்ச்சி திட்ட பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டுகிறார். விழாவில் 50 ஆயிரத்து 88 பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு துறைகள் சார்பில் ரூ.284 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார். அதன்படி ஒரே நாளில் ஈரோடு மாவட்டத்திற்கு ரூ.1,368 கோடியே 88 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்குகிறார்.

விழா முடிந்ததும் அங்கிருந்து கார் மூலம் புறப்பட்டு கோவை விமான நிலையம் சென்று அங்கிருந்து விமானம் மூலம் சென்னைக்கு செல்கிறார். முதலமைச்சர் பங்கேற்கும் அரசு விழாவை பிரம்மாண்டமாக நடத்த வீட்டு வசதி துறை அமைச்சர் முத்துசாமி தலைமையில் ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். முதலமைச்சர் வருகையை முன்னிட்டு ஈரோட்டில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. 8 மாவட்டங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள். முதலமைச்சர் வருகையை ஒட்டி ஈரோடு மாவட்டம் முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது.

## அமித்ஷாவின் பேச்சு: அம்பேத்கரின் பேரன் அளித்த பதில் என்ன..?



புதுடெல்லி, டிச.21

அம்பேத்கரின் பேரன் பிரகாஷ் அம்பேத்கர், மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவின் அரசியல் சாசனம் குறித்த கருத்துகளை விமர்சித்துள்ளார். முன்னதாகநாடாளுமன்ற மாநிலங்களவையில் அரசியல் சாசனம் மீதான விவாதத்தின்போது மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, சட்ட மேதை அம்பேத்கரை இழிவுபடுத்தும் விதமாக பேசியதாக கூறப்படும் விவகாரம் பெரும் சர்ச்சையை கிளப்பி உள்ளது.

அமித்ஷாவின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து நேற்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் 'ஜெய் பீம்.. ஜெய் பீம்..' என முழக்கமிட்டனர். இதனால், அவையை நடத்தமுடியாமல், நாள் முழுக்க ஒத்திவைக்கப்பட்டது. இந்த சூழலில் நேற்று மாலை, டெல்லியில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் மத்திய மந்திரி அமித்ஷா செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், "அம்பேத்கர் மீது நேருவுக்கு இருந்த வெறுப்பு அனைவரும் அறிந்ததே" என்றும் "எனது கருத்தை திரித்து வெளியிடுகின்றனர்" என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில் மராட்டிய மாநிலத்தின் புனே நகரில் அம்பேத்கரின் பேரன் பிரகாஷ் அம்பேத்கரிடம் அமித்ஷாவின் பேச்சு குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்து பேசிய அவர், "பா.ஜனதா உருவாகும் முன், அதன் முன்னோடிகளான ஜனசங்கமும், ஆர்.எஸ்.எஸ்ம், அரசியல் சாசனம் ஏற்கப்படும்போது அம்பேத்கரை எதிர்த்தன. அந்த வகையில் அமித்ஷாவின் தற்போதைய பேச்சு பா.ஜனதாவின் அதே பழைய மனநிலையை முன்னுக்கு கொண்டு வந்துள்ளது.

அதில் புதிதாக எதுவும் இல்லை. அவர்களால் பழைய திட்டங்களை செயல்படுத்த முடியவில்லை. அதற்கு காரணம் அம்பேத்கர். எனவே அவர்கள் அம்பேத்கரை இழிவுபடுத்தும் செயலை தொடர்ந்து செய்வார்கள்" என்று பிரகாஷ் அம்பேத்கர் கூறினார்.


## 'மத்திய அரசு ஊழியர்களுக்கு முன்கூட்டியே ஓய்வு அளிக்கும் திட்டம் இல்லை' மத்திய அரசு

புதுடெல்லி, டிச.21

நாடாளுமன்ற மாநிலங்களவையில், மத்திய அரசு ஊழியர்களுக்கு முன்கூட்டியே ஓய்வு அளிக்கும் திட்டம் தொடர்பாகவும், அந்த திட்டத்தினால் ஊழியர்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கம் குறித்தும் மத்திய அரசு பரிசீலித்து வருகிறதா? என கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த கேள்விக்கு மத்திய பணியாளர் துறை இணை மந்திரி ஜிதேந்திர சிங் எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார். அதில், மத்திய அரசு ஊழியர்களுக்கு முன்கூட்டியே ஓய்வு அளிக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார். அதே சமயம், பரிந்துரைக்கப்பட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்யும் மத்திய அரசு ஊழியர்கள், மத்திய சிவில் சேவைகள் (ஓய்வூதியம்) விதிகள், 2021 மற்றும் அனைத்திந்திய சேவைகள் (இறப்புஓய்வுப் பலன்கள்) விதிகள், 1958 ஆகியவற்றின் கீழ் முன்கூட்டியேவிருப்பஓய்வுபெறமுடியும்என்றும்அவர்தெரிவித்துள்ளார்.

## அமித்ஷாவை கண்டித்து கர்நாடக சட்டசபையில் இருந்து காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் வெளிநடப்பு



பெங்களூரு, டிச.21

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், மாநிலங்களவையில் அரசியல் சாசனம் மீது நடந்த சிறப்பு விவாதத்துக்கு நேற்று முன்தினம் உள்துறை மந்திரி அமித்ஷா பதில் அளித்தார். அப்போது அம்பேத்கர் பெயரை தொடர்ந்து கூறுவதை சுட்டிக்காட்டி காங்கிரஸ் கட்சியை அவர் விமர்சித்தார். அதாவது, 'அம்பேத்கர், அம்பேத்கர், அம்பேத்கர்... என கூறுவது இப்போது 'பேஷன்' ஆகி விட்டது. கடவுளின் பெயரை இப்படி கூறியிருந்தால், சொர்க்கத்திலாவது அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும்' என்றார்.

அம்பேத்கர் பற்றி அமித்ஷா பேசியது அரசியல் வட்டாரங்கள் இடையே சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணியை சேர்ந்த எதிர்க்கட்சியினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நாள் முழுவதும் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், இன்று காலை தொடங்கிய கர்நாடக சட்டசபையில் மத்திய மந்திரி அமித்ஷாவை கண்டித்து காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் அம்பேத்கர் புகைப்படங்களை கையில் ஏந்தியபடி போராட்டம் நடத்தினர். இதில் கர்நாடக முதல்மந்திரி சித்தராமையாவும் கலந்து கொண்டார். ராஜ்யசபா தலைவர் உண்மையிலேயே அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு செயல்பட்டிருந்தால், அவர் அமித்ஷாவை உடனடியாக சபையில் இருந்து சஸ்பெண்ட் செய்திருக்க வேண்டும் என்று சட்டசபையில் சித்தராமையா தெரிவித்தார். அதன்பின்னர், சட்டசபையில் இருந்து காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்தனர்.

## மேட்டூர் அனல் மின் நிலைய விபத்து.. சிக்கியவர்களை மீட்க துரிதமாக செயல்படுங்கள்: EPS வலியுறுத்தல்

சென்னை, டிச.21

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் பயங்கர விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் சிக்கி பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. விபத்தில் காயமுற்ற ஐந்துக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மேட்டூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அனல் மின் நிலைய விபத்து குறித்து தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், "மேட்டூர் அனல்மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் மூவர் படுகாயம் அடைந்ததாகவும் இருவர் காணவில்லை என்றும் ஊடகத்தில் வரும்



செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது." "காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ள்ளோர்க்கு உரிய சிகிச்சை அளிக்கவும், விபத்தில் சிக்கியுள்ள இருவரையும் மீட்க துரிதமாக செயல்படுமாறும் திமுக அரசை வலியுறுத்துகிறேன். விபத்தில் பாதிக்கப்பட்ட அனைவரும் விரைவில் பூரண உடல்நலம் பெற்று வீடு திரும்ப எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார்.

## நெல்லையில் கொட்டப்பட்ட மருத்துவக் கழிவுகள் ஆபத்தானவை அல்ல கேரள அதிகாரிகள் பேட்டி



நெல்லை, டிச.21

கேரள மருத்துவக்கழிவுகள், அந்த மாநில எல்லையை ஒட்டி உள்ள தமிழக மாவட்டங்களில் கொட்டப்படுவது தொடர்கதையாகி வருகிறது. தமிழகத்தில், குறிப்பாகத்திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் இருந்து கேரள மாநிலத்திற்குக் காய்கறிகள், பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கனிம வளங்கள் லாரிகளில் அனுப்பப்படுகின்றன. அதன் பின்னர் கேரளாவில் இருந்து திரும்பி வரும் லாரிகளில் கோழி இறைச்சி கழிவுகள், மருத்துவ கழிவுகள் போன்றவை மூட்டை மூட்டையாகத் தமிழகத்தில் கொட்டப்படும் சம்பவங்கள் நடைபெற்று வருகிறது.

இந்த சூழலில் திருநெல்வேலி மாவட்டம் சீதப்பன்நல்லூர் அருகே உள்ள நடுக்கல்லூர், பலவூர் உள்ளிட்ட இடங்களில் உள்ள அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் மூட்டை மூட்டையாகக் கேரளா மாநிலத்தைச் சேர்ந்த மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன. அதாவது திருவனந்தபுரம் மண்டல புற்றுநோய் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ கழிவுகள் அதிகப்படியாகக் கொட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இந்த மருத்துவ கழிவில் மருத்துவமனையின் அனுமதிச் சீட்டுகள், ரத்தக் கசிவுகள், பஞ்சுகள் மற்றும் குளுக்கோஸ் பாட்டில்கள் பல்வேறு வகையான பொருட்கள் கழிவுகளாக கொட்டப்பட்டுள்ளன.

கேரள மருத்துவக் கழிவுகள் திருநெல்வேலி பகுதியில் கொட்டப்பட்ட சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது. கேரள மருத்துவக் கழிவுகள் தமிழகத்தில் கொட்டப்படுவதற்கு அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இதனிடையே மருத்துவக் கழிவுகளுக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என திருவனந்தபுரம் மண்டல புற்றுநோய் மருத்துவமனை மறுத்துள்ளது. இந்த நிலையில் நெல்லை அருகே மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்ட இடத்தில் கேரள சுற்றுச்சூழல், மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். அப்போது பேட்டியளித்த கேரள அதிகாரிகள், "நெல்லையில் கொட்டப்பட்ட மருத்துவக் கழிவுகள் ஆபத்தானவை அல்ல. மருத்துவக் கழிவுகளில் சோதனைக்கு பயன்படுத்தப்படும் மாதிரிகளே அதிகம் உள்ளன. பசுமைத் தீர்ப்பாய உத்தரவின்படி கழிவுகளை அகற்றுவது குறித்து கேரள அரசு நடவடிக்கை எடுக்கும். இன்று அனைத்து இடங்களிலும் ஆய்வு மேற்கொண்டு நாளை கேரள அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்" என்று தெரிவித்தனர்.

# 'தி.மு.க. ஆட்சியில் கட்டி கொடுக்கப்படும் வீடுகள் தரமானதாக இருக்கும்' அமைச்சர் தா.மோ.அன்பரசன்



சென்னை டிச.21

சென்னை வாழைத்தோப்பு பகுதியில் கட்டப்பட்ட வீடுகள் இடப்பிரச்னை காரணமாக காலதாமதம் ஆனதாகவும், புதிதாக கட்டப்பட்ட 504 வீடுகள் பொங்களுக்கு முன்பாக பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;

"தி.மு.க. ஆட்சியில் கட்டி கொடுக்கப்படும் வீடுகள் சுமார் ஐம்பது, அறுபது வருடங்கள் வரை தாங்கக் கூடிய வகையில், தரமானதாக இருக்கும். முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதி 1970ம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் திட்டத்தை கொண்டு வந்தார். தற்போது அதை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமாக மாற்றியிருக்கிறோம். இந்த திட்டத்தின்படி பட்டினப்பாக்கத்தில் வீடுகள் கட்டப்பட்டு சுமார் 50 ஆண்டுகள் ஆகிவிட்டது. மேலும் அது கடற்கரை அருகே உள்ளது. அங்கு இடிந்து விழுந்தது பழைய வீடு. பழுதான நிலையில் சென்னையில் மட்டும் சுமார் 27 ஆயிரம் வீடுகள் உள்ளன. அதோடு பிற மாவட்டங்களில் சுமார் 3 ஆயிரம் வீடுகள் உள்ளன. இந்த 30 ஆயிரம் வீடுகளையும் படிப்படியாக இடித்துவிட்டு, அந்தந்த வீடுகளில் குடியிருந்தவர்களுக்கு அதே இடத்தில் வீடு கட்டி தர வேண்டும் என முதல் அமைச்சர் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் வீடுகள் கட்டி கொடுக்கப்படுகின்றன. மேலும் தற்போது கட்டப்படும் வீடுகள் 400 சதுர அடிக்கு மேல் கட்டப்படுகின்றன." இவ்வாறு தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.



தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் கன மழையால் ஏற்பட்ட பாதிப்புகள் தற்காலிகமாக சரி செய்யப்பட்டுள்ள பணியை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆய்வு செய்தனர். சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து குற்றாலத்தில் குளிக்க அனுமதி கோரி கோரிக்கைகள் வரப்பெற்றதை தொடர்ந்தும், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்தும், பொதுமக்கள் குற்றால அருவியில் ஓரமாக நின்று குளிப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தால் அனுமதி வழங்கப்படுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

# அம்பேத்கருக்கு எதிராக பாஜக ஒருபோதும் செயல்பட்டதில்லை: அண்ணாமலை



கோவை, டிச.21

கோவை விமான நிலையத்தில் பாஜக தலைவர் அண்ணாமலை செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

அம்பேத்கருக்கு காங்கிரஸ் செய்துள்ள அவமானங்களை அமித்ஷா பட்டியலிட்டுள்ளார். அம்பேத்கர் வாழ்ந்த இடங்கள் அனைத்தையும் வாங்கி, பாஜக மக்கள் வரும் இடமாக மாற்றியுள்ளது. காங்கிரஸ் அம்பேத்கருக்கு மிகப்பெரிய துரோகம் செய்துள்ளது. ஏன் காங்கிரஸ் அம்பேத்கருக்கு பாரத் ரத்னா விருது க்கு பரிந்துரைக்கவில்லை. காங்கிரஸ் கட்சியில் நேரு, அம்பேத்கருக்கு எதிராக பிரச்சாரம் செய்தார். அம்பேத்கருக்கு போடுகிற ஓட்டு குப்பையில் போடுகிற ஓட்டு என்றார். பாஜக இத்தனை ஆண்டுகளில் ஒரு போதும் அம்பேத்கருக்கு எதிராக செயல்பட்டதில்லை. அம்பேத்கர் எனக்கு கடவுள். அவர் வழிப்படி நான் அரசியல் செய்கிறேன். உதயநிதி ஹிந்தி தெரியாது போடா என்று சொன்னவர். அமித்ஷா பேசியது என்ன புரிந்தது. 35 திமுக அமைச்சர் பட்டியலில் ஏன் பட்டியலின சகோதர, சகோதரிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை?. இவ்வாறு அவர் கூறினார்.

# அமித்ஷா பேச்சை திரித்து பேசும் காங்கிரஸ் மத்திய மந்திரி எல். முருகன் கண்டனம்

சென்னை, டிச.21

மத்திய இணை மந்திரி எல். முருகன் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

அண்ணல் அம்பேத்கர் குறித்து மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா பேசிய பேச்சைவேண்டுமென்றே திரித்து பேசுகிற காங்கிரஸ் கட்சிக்கு எனது கடும் கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாம் பேசியது என்ன என்பது குறித்து அமித்ஷா தெளிவான விளக்கத்தை தந்துள்ளார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்த பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவுபடுத்தியதும் அவர் உருவாக்கிய அரசியல் சாசனத்துக்கு எதிராக செயல்பட்டு வருவதும் காங்கிரஸ் கட்சி தான். அண்ணல் அம்பேத்கர் அவர்களை காங்கிரஸ் கட்சி எப்படி நடத்தியது என்பதை அமித்ஷா வெளிச்சம் போட்டு காட்டி உள்ளார்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு அவரது மரணத்துக்குப் பின்னர் கூட பாரத ரத்னா தர மறுத்து வேடிக்கை காட்டிய கட்சி தான் காங்கிரஸ். காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் தங்களுக்கு தானே பல முறை பாரத ரத்னா விருதைக் கொடுத்துக் கொண்டார்கள். 1955ம் ஆண்டு நேரு தமக்கு தாமே பாரத ரத்னா விருது பெற்றுக் கொண்டார். 1971ம் ஆண்டு இந்திரா காந்தி தமக்கு தாமே பாரத ரத்னா விருது வழங்கிக் கொண்டார். ஆனால் 1990ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத காலத்தில், பா.ஜ.க. ஆதரவுடனான மத்திய அரசு ஆட்சியில் இருந்த போதுதான் அண்ணல் அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. அம்பேத்கர் மீதான நேருவின் வெறுப்பை நாடு நன்கு அறியும்.

அதே சமயம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அண்ணல் அம்பேத்கருக்கு பெருமை சேர்த்து வருவதை நாடறியும்.



அண்ணல் அம்பேத்கர் அவர்களின் புகழை உலகம் முழுவதும் பா.ஜ.க. பரப்பி வருகிறது. அம்பேத்கர் அவர்கள் இயற்றிய சட்டங்களை உரிய முறையில் அமல்படுத்தி அனைவருக்கும் உரிய நீதி என்ற உன்னத கோட்பாட்டை செயல்படுத்தி வருவதும் பாரத பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு தான்.

தேர்தல் சமயத்தில் அமித்ஷா அவர்களின் பேச்சை AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எடிட் செய்து திரித்து காங்கிரஸ் வெளியிட்டது. அதே போல தற்போதும் காங்கிரஸ் திரித்து கூறும் வேலையை மீண்டும் செய்கிறது காங்கிரஸ் கட்சி நேற்று முதல் உண்மையை மறைத்து திரித்து தொடர்ந்து பொய் மூட்டைகளை அவிழ்ந்து விடுகிறது. காங்கிரஸ் கட்சி தான் அண்ணல் அம்பேத்கர் வகுத்த இடஒதுக்கீட்டுக்கும் எதிரான கட்சி.

மக்கள் தலைவர்களுக்கு எதிராக செயல்பட்டதால் தான் காங்கிரஸ் இன்று ஆட்சி அதிகாரத்தை இழந்து மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனை காங்கிரஸ் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

திரித்துகூறும் அரசியலை பாரத நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. இந்த அவதூறு பிரசாரம் தொடர்ந்தால் காங்கிரசை மக்கள் தேர்தல் களத்தில் இருந்தே அகற்றி விடுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தனிமையில் சந்திப்பு: மாணவியை தாயாக்கிய ஆசிரியர் போக்சோ சட்டத்தில் கைது

சேத்தியாத்தோப்பு, டிச.21

கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு அருகே அரசு மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இங்கு கடந்தாண்டு பிளஸ் 2 படித்து தேர்ச்சி பெற்ற 17 வயது மாணவி ஒருவர், தற்போது சென்னையில் பி.எஸ்சி., நர்சிங் படித்து வருகிறார். இந்த நிலையில் அந்த மாணவிக்கு கடந்த 4 நாட்களுக்கு முன்பு குழந்தை பிறந்துள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர், மாணவியிடம் விசாரித்தபோது, மேல்நிலை பள்ளியில் படித்தபோது வேதியியல் ஆசிரியர் தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாக தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து மாணவியின் பெற்றோர் சேத்தியாத்தோப்பு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

தொடர்ந்து நடந்த விசாரணையில் அந்த மாணவி, சொந்த ஊரில் படித்த அரசு பள்ளியில் வேதியியல் ஆசிரியராக பணிபுரிந்து வந்த புடையூர் கிராமத்தை சேர்ந்த மலர் செல்வம் (50) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு இருவரும் அவ்வப்போது தனிமையில் சந்தித்து வந்ததில் கர்ப்பம் அடைந்ததும், பின்னர் அவர் சென்னையில் உள்ள கல்லூரியில் நர்சிங் படித்து வருவதும் தெரியவந்தது. இதையடுத்து உதவி தலைமை ஆசிரியர் மலர் செல்வத்தை போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் கைது செய்து சிறையில் அடைந்தனர்.

முன்னதாகபதவிஉயர்வு பெற்று உதவி தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வரும் மலர் செல்வத்துக்கு திருமணம் ஆகி மனைவி மற்றும் 2 மகள்கள், ஒரு மகன் இருப்பதும் விசாரணையில் தொ ியவந்தது.

# வேலூர் முன்னாள் எம்.எல்.ஏ.க்கு எதிரான மேல்முறையீட்டு மனு: தீர்ப்பு தள்ளிவைப்பு

சென்னை, டிச.21

கடந்த 2006ம் ஆண்டு முதல் 2011 ம் ஆண்டு வரை வேலூர் தொகுதி காங்கிரஸ்எம்.எல்.ஏ.வாக பதவி வகித்த ஞானசேகரன். வருமானத்திற்கு அதிகமாக ரூ.3 கோடியே 15 லட்சம் அளவுக்கு சொத்துக்கள் சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் எம்.எல்.ஏ. ஞானசேகரன் மற்றும் அவரது மனைவி மேகலா ஆகியோரை வழக்கிலிருந்து விடுவித்து வேலூர் சிறப்பு நீதிமன்றம், கடந்த 2016 ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை எதிர்த்து லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தது. இந்த மேல்முறையீட்டு மனு நீதிபதி வேல்முருகன் முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், வருமான வரி கணக்கில் சொத்துக்களை குறிப்பிட்டுள்ளதால் அவை சட்டபூர்வமாக சேர்க்கப்பட்ட சொத்துக்களாக கருத முடியாது என்றும் முன்னாள் எம்.எல்.ஏ.வின் மனைவிக்கு தனிப்பட்ட வருவாய் ஆதாரம் ஏதும் இல்லை என்றும் வாதிட்டார்.

மேலும் இருவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு முகாந்திரம் உள்ளது என்றும் லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. முன்னாள் எம்.எல்.ஏ. ஞானசேகரன் மற்றும் அவரது மனைவி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், வருமானவரித்துறை கணக்கின் அடிப்படையில் மட்டுமே லஞ்ச ஒழிப்புத்துறை இந்த வழக்கை பதிவு செய்துள்ளது என்றும் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்ப்பதாக கூறப்படக்கூடிய காலகட்டத்திற்கு முன்பே இருவருக்கும் ஏராளமான சொத்துக்கள் இருந்ததாகவும் வாதிட்டார்.

குற்ற பத்திரிகை தாக்கல் செய்வதற்கு எந்த ஆதாரங்களும் இல்லாத நிலையில் இந்த வழக்கிலிருந்து இருவரையும் விடுவித்து விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு சரியே என்றும் அதனை உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்து உத்தரவிட்டார்.

# கோவை மாசாணி அம்மன் கோவிலில் காணிக்கையாக பெறப்பட்ட 28.9 கிலோ நகைகள் ரிசர்வ் வங்கியில் டெபாசிட்



கோவை, டிச.21

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள ஆனைமலையில் பிரசித்தி பெற்ற மாசாணி அம்மன் கோவில் அமைந்துள்ளது.

இந்த கோவிலில் பக்தர்களிடம் இருந்து காணிக்கையாக பெறப்பட்ட 28.9 கிலோ தங்க நகைகள் உருக்கப்பட்டு, ரிசர்வ் வங்கியில் டெபாசிட் செய்யப்பட உள்ளது.

இதற்காக ஸ்டேட் வங்கியின் மூலம் மும்பையில் உள்ள அரசு உருக்கு ஆலைக்கு நகைகள் அனுப்பி வைக்கப்படுகிறது. இதன்படி நகைகளை ஸ்டேட் வங்கி மேலாளரிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, முன்னாள் நீதிபதி துரை ராஜு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழக பிரிவை சேர்ந்த 26 எஸ்.பி.க்களுக்கு ஐ.பி.எஸ். அதிகாரிகளாக பதவி உயர்வு

சென்னை, டிச.21

தமிழக காவல்துறையில் டி.என்.பி.எஸ்.சி குரூப்1 தேர்வு மூலம் நியமிக்கப்படும் நேரடி டி.எஸ்.பி.க்கள் எஸ்.பி. ஆக பதவி உயர்வு பெற்ற பிறகு அவர்களுக்கு ஐ.பி.எஸ். அந்தஸ்து வழங்கப்படும். இதன்படி ஐ.பி.எஸ் அந்தஸ்து வழங்க தகுதியான 26 எஸ்.பி.க்களின் பட்டியலை மத்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பி வைத்தது. இந்த நிலையில், தமிழக பிரிவை சேர்ந்த 26 எஸ்.பி.க்களுக்கு ஐ.பி.எஸ். அதிகாரிகளாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. டி.என்.பி.எஸ்.சி. தேர்வு எழுதி நேரடியாக டி.எஸ்.பி.யாக பணியில் சேர்ந்த இவர்கள், மாவட்ட எஸ்.பி.க்களாகவும், துணை ஆணையர்களாகவும் பணியாற்றி வருகின்றனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

# மருத்துவக் கழிவு விவகாரம்: மேலும் ஒரு வழக்கு



சுத்தமல்லி, டிச.21

கேரள மருத்துவக்கழிவுகள், அந்த மாநில எல்லையை ஒட்டி உள்ள தமிழக மாவட்டங்களில் கொட்டப்படுவது தொடர்கதையாகி வருகிறது. தமிழகத்தில், குறிப்பாகத் திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இருந்து கேரள மாநிலத்திற்குக் காய்கறிகள், பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கனிம வளங்கள் லாரிகளில் அனுப்பப்படுகின்றன. அதன் பின்னர் கேரளாவில் இருந்து திரும்பி வரும் லாரிகளில் கோழி இறைச்சி கழிவுகள், மருத்துவ கழிவுகள் போன்றவை மூட்டை மூட்டையாகத் தமிழகத்தில் கொட்டப்படும் சம்பவங்கள் நடைபெற்று வருகிறது.


இந்த சூழலில் திருநெல்வேலி மாவட்டம் சீதப்பன்நல்லூர் அருகே உள்ள நடுக்கல்லூர், பலவூர் உள்ளிட்ட இடங்களில் உள்ள அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் கடந்த 2 தினங்களாக மூட்டை மூட்டையாகக் கேரளா மாநிலத்தைச் சேர்ந்த மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன. அதாவது திருவனந்தபுரம் மண்டல புற்றுநோய் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ கழிவுகள் அதிகப்படியாகக் கொட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இந்த மருத்துவ கழிவில் மருத்துவமனையின் அனுமதிச் சீட்டுகள், ரத்தக் கசிவுகள், பஞ்சுகள் மற்றும் குளுக்கோஸ் பாட்டில்கள் பல்வேறு வகையான பொருட்கள் கழிவுகளாக கொட்டப்பட்டுள்ளன.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த வருவாய்த்துறை உள்ளிட்ட அரசு அதிகாரிகள் இது தொடர்பாக விசாரணை நடத்தினர். இதனைத்தொடர்ந்து நடுக்கநல்லூர், பழவூர் ஊராட்சி பகுதிகளில் டன் கணக்கில் மருத்துவக் கழிவு கொட்டப்பட்ட விவகாரம் தொடர்பாக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் கொண்டா நகரம் பகுதியில் மருத்துவக் கழிவு கொட்டப்பட்டதாக சுத்தமல்லி காவல்நிலையத்தில் மேலும் ஓர் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள மருத்துவக் கழிவுகள் திருநெல்வேலி பகுதியில் கொட்டப்பட்ட சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது. இதனிடையே கேரள மருத்துவக்கழிவுகள் தமிழகத்தில் கொட்டப்படுவதற்கு அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

# துணை வேந்தர் நியமனத்தில் முட்டுக்கட்டை: தமிழக அரசு தீர்வு காண வேண்டும் அன்புமணி கோரிக்கை



சென்னை, டிச.21

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தரை தேர்வு செய்வதற்காக தமிழக அரசின் சார்பில் தேடுதல் குழுவை அமைத்து பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணை உச்சநீதிமன்றத்தீர்ப்புக்கு எதிரானது என்றும், அதனால் அந்த ஆணையை அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் ஆளுனர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார்.

இதன்மூலம் துணை வேந்தர் நியமனம் குறித்து அரசுக்கும், ஆளுனருக்கும் மேலும் ஒரு மோதல் ஏற்பட்டுள்ளது. 6 பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் பதவி காலியாக உள்ள நிலையில் இந்த மோதல் தேவையற்றதாகும். 13 மாதங்கள் ஆகியும் துணைவேந்தர்கள் நியமனம் குறித்த வழக்கை உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு கொண்டு வர முடியாதது விந்தையாக உள்ளது. துணைவேந்தர்கள் நியமனம் குறித்த சர்ச்சைதொடரவேண்டும் என்று தமிழக அரசு விரும்புகிறதோ? என்ற ஐயத்தைத் தான் இது ஏற்படுத்துகிறது. உச்சநீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கின் விசாரணையை விரைவுபடுத்தி இந்த சிக்கலுக்கு தமிழக அரசு தீர்வு காண வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வனத்துறையினருக்கு கண்ணாமூச்சி ஆட்டம் காட்டி கஞ்சா செடி வளர்த்த 2 பேர் கைது



கள்ளக்குறிச்சி, டிச.21

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு கள்ளச்சாராயம் குடித்து 60க்கும் மேற்பட்டோர் பேர் பலியான சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அப்போது, போலீசார், மது விலக்குப் பிரிவினர் கல்வராயன் மலை பகுதியில் அதிரடி சோதனைகள் நடத்தி கள்ளச்சாராயம் காய்ச்சுவோரை கைது செய்தனர்.

கல்வராயன் மலை பகுதி,சமூகவிரோதிகளின் கூடாரமாக விளங்கி வருகிறது. விவசாயப் பயிர்களுக்கு மத்தியில் கஞ்சா விளைவிப்பது என அப்பகுதியில் சட்ட விரோத செயல்கள் ஏராளமாக நடைபெறும் வெளிச்சத்துக்கு வந்தது.

இந்நிலையில் கல்வராயன் மலை அருகே வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் 1600 கஞ்சா செடிகளை வளர்வதாக தகவல் வந்துள்ளது.

இதனையடுத்து வனத்துறை அதிகாரிகள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று ஆய்வு செய்து விசாரணை நடத்தினர். 1600 கஞ்சா செடிகளை வளர்த்ததாக 2 பேரை வனத்துறையினர் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அங்கு 104 கிலோ கஞ்சா செடிகளை வனத்துறையினர் பறிமுதல் செய்தனர்.

வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில் கஞ்சா செடிகளை வளர்த்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அமித்ஷாவை கண்டித்து சேலத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ரெயில் மறியல் செய்ய முயற்சி



சேலம், டிச.21

மத்திய மந்திரி அமித்ஷா அம்பேத்கரை அவமதித்ததாக கூறி சேலம் ரெயில் நிலையத்தில் ரெயில் மறியல் போராட்டம் நடத்தபோவதாக விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் அறிவித்திருந்தனர். இது பற்றி தெரிய வந்ததும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ரெயில் நிலையம் முன்பு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் காஜா மைதீன் தலைமையில் ரெயில் மறியல் செய்ய ஊர்வலமாக வந்தனர்.

அப்போது அவர்கள் அமித் ஷாவுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். தொடர்ந்து அவர்கள் ரெயில் நிலையத்திற்குள் நுழைய முயன்றனர். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தினர். அப்போது போலீசாருக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சியினருக்கும் இடையே தள்ளு, முள்ளு ஏற்பட்டது. பின்னர் ரெயில் மறியலுக்கு முயன்ற விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ரெயில் நிலையத்திற்கு முன்பு போராட்டம் நடத்தினர். இதனால் ரெயில் நிலையம் முன்பு பரபரப்பு நிலவியது.

# அரசு ஆஸ்பத்திரியில் கழிவறைகளில் தண்ணீர் வராததால் நோயாளிகள் உறவினர்கள் தவிப்பு



சேலம், டிச.21

சேலம் அரசு தலைமை ஆஸ்பத்திரிமல்டிஸ்பெசாலிட்டி ஆஸ்பத்திரியாக செயல்பட்டு வருகிறது. இதனால் சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, ஈரோடு உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து தினமும் ஏராளமானோர் சிகிச்சைக்கு வந்து செல்கிறார்கள்.

இதனால் 1000த்திற்கும் மேற்பட்டோர் வெளி நோயாளிகளாக தினமும் சிகிச்சை பெற்று செல்லும் நிலையில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உள் நோயாளிகளாகவும் இங்கு தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதனால் சேலம் அரசு ஆஸ்பத்திரி எப்போதும் நோயாளிகள் மற்றும் அவர்களை பார்க்க வருபவர்கள் என மக்கள் கூட்டத்தால் பரபரப்பாக காட்சி அளிக்கும்.

இந்த நிலையில் சேலம் அரசு ஆஸ்பத்திரியில் நேற்று மதியம் முதல் கழிவறைகள் மற்றும் கை, பாத்திரங்கள் கழுவும் இடங்களிலும் தண்ணீர் வரவில்லை. இதனால் நோயாளிகள் ஒவ்வொரு அறையாக தண்ணீருக்கு அலைந்தும் அங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் நேற்றிரவு முதல் கழிவறை செல்பவர்கள் கூட தண்ணீர் இல்லாமல் கடும் அவதிப்பட்டனர். இதனால் கழிவறை அருகில் செல்ல முடியாமல் துர் நாற்றம் வீசுகிறது.

2வது நாளாக இன்றும் ஆஸ்பத்திரி கழிவறைகளில் தண்ணீர் வரவில்லை. இதனால் அங்கு தங்கியிருக்கும் நோயாளிகள் இயற்கை உபாதை கழிக்க முடியாமல் கடும் அவதிப்பட்டனர். மேலும் நோயாளிகளின் உறவினர்கள் வெளியில் சென்று இயற்கை உபாதைகளை கழித்து வருகிறார்கள்

உள் நேயாளிகள் வெளியிலும் செல்ல முடியாமல், இயற்கை உபாதையும் கழிக்க முடியாமலும் கடும் அவதிப்பட்டு வருகிறார்கள். சிலரது உறவினர்கள் வெளியில் சென்று பாத்திரங்களில் தண்ணீர் வாங்கி பயன்படுத்தினர். இதே போல சேலம் அரசு ஆஸ்பத்திரி வளாகத்தில் உள்ள கழிவறையிலும் 2வது நாளாக இன்றும் தண்ணீர் வராததால் போலீசாரும் கடும் அவதிப்பட்டு வருகிறார்கள். எனவே உடனடியாக அரசு ஆஸ்பத்திரியில் சீரான தண்ணீர் வழங்கி நோயாளிகளின் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுப்பதுடன், தடையற்ற மின்சாரமும் வழங்க வேண்டும் என்பது அங்கு சிகிச்சை பெறுபவர்களின் பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது.

# புழல் ஏரியில் கலந்து வரும் திருமுல்லைவாயல் பகுதி கழிவுநீர் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



ஆவடி, டிச.21

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளில் ஒன்று புழல் ஏரி. இந்த ஏரி சுமார் 18 சதுர கி.மீ. பரப்பளவில் செங்குன்றம், புழல், பம்மதுகுளம், அம்பத்தூர் உள்ளிட்ட பகுதிவரை பரந்து விரிந்து உள்ளது. புழல் ஏரியின் உயரம் 21.20 அடி.3300 மில்லியன் கன அடி தண்ணீர்சேமித்து வைக்கலாம்.

தற்போது பெய்து வரும் மழையின் காரணமாக புழல் ஏரி முழுவதும் நிரம்பி கடல்போல் காட்சி அளிக்கிறது. மேலும் புழல் ஏரியில் கழிவு நீர் கலப்பும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. திருமுல்லைவாயல் மற்றும் அம்பத்தூர் பகுதியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் ஏரி அருகே உள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர் புழல் ஏரியில் கலந்து வருகிறது.

குறிப்பாக ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட திருமுல்லைவாயல் பகுதியில் இருந்து வெளியேறும் கழிவு நீர் முழுவதும் புழல் ஏரியில் கலக்கிறது. திருமுல்லைவாயல் பகுதியில் பச்சையம்மன் கோவில் அருகே உள்ள குளக்கரை சாலை உள்ளிட்ட பகுதிகள் வழியாக வெங்கடாசலம் நகர் பகுதியில் புழல் ஏரியில் சேரும் வகையில் சுமார் 3 கி.மீ. தூரத்திற்கு மழைநீர்கால்வாய் உள்ளது.

இதேபோல், சி.டி.எச். சாலை அருகே சரஸ்வதி நகர் உள்ளிட்ட பகுதிகள் வழியாக தென்றல் நகர் பகுதியிலும் புழல் ஏரியில் கலக்கும் வகையில் சுமார் 2½ கி.மீ. தூரத்திற்கு மற்றொரு மழைநீர் கால்வாய் உள்ளது.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட இந்த 2 மழைநீர் கால்வாய்களில், மாசிலாமணீஸ்வரர் நகர், கமலம் நகர், வெங்கடாசலம் நகர் மற்றும் சரஸ்வதி நகர், தென்றல் நகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் விடப்படுகிறது. இதனால் மழைநீர்கால்வாயில் கழிவு நீர் பாய்ந்து புழல் ஏரியில் கலந்து வருகிறது. ஏரி மாசடைந்து வருவதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

இதுகுறித்து சமூக ஆர்வலர் ஒருவர் கூறும்போது, திருமுல்லைவாயல் பகுதியில் உள்ள மழைநீர் கால்வாய்கள் மூலம் மட்டுமல்லாமல், திருமுல்லைவாயில் வெங்கடாசலம் நகர் அருகே உள்ள அனுகிரகம் நகர், கற்பகாம்பாள்நகர், சிவா கார்டன் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மழைநீரோடு கழிவுநீர் புழல் ஏரியில் கலக்கிறது.

மேலும், அம்பத்தூர், திருமுல்லைவாயல் தென்றல் நகர், ஒரகடம் வெங்கடேஸ்வரா நகர் மற்றும் பம்மதுகுளம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகளின் கழிவுநீரும் புழல் ஏரியில் சேருகிறது. இதனை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். புழல் ஏரியை பாதுகாக்க வேண்டும் என்றார்.

# எச்டிஎஃப்சி வங்கியில் நுழைந்து ஊழியரின் காதை வெட்டிய நபர் போலீசார் விசாரணை

சென்னை, டிச.21

சென்னை தி.நகர் பார்கிட் சாலையில் உள்ள எச்.டி.எஃப்.சி வங்கியில் நுழைந்த நபர் அங்கு ஊழியராக பணியாற்றி வந்த தினேஷ் என்பவரை அரிவாளால் வெட்டிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வாடிக்கையாளர் போல் வங்கிக்குள் நுழைந்து, வெகுநேரமாக ஆள்நடமாட்டத்தை அறிந்து தினேஷ் காதை வெட்டி உள்ளார். இதனால் படுகாயமடைந்த தினேஷை அங்கிருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

மேலும் காதை வெட்டிய நபரை அங்கிருந்த ஊழியர்கள் பிடித்து போலீசில் ஒப்படைத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்துள்ள போலீசார் அங்கு பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி காட்சிகளை கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராமேசுவரம் மீனவர்கள் 14 பேர் விடுதலை மன்னார் நீதிமன்றம் உத்தரவு




ராமேசுவரம், டிச.21

ராமேசுவரத்தில் இருந்து கடந்த டிசம்பர் 5ந் தேதி 338 விசைப் படகுகளில் 1,500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர். இதில் சுமார் 100க்கும் மேற்பட்ட விசைப்படகுகளை சேர்ந்த மீனவர்கள் தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்கும் இடைப்பட்ட பகுதியான நெடுந்தீவு அருகே ஆழ்கடலில் மீன் பிடித்துக் கொண்டு இருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிக்க வந்ததாக கூறி, ராமேசுவரத்தைச் சேர்ந்த ரிபாக்சன் (வயது 26), ராஜ பிரபு சீனிபாண்டி (27), அரவிந்த் பாண்டி சீனிபாண்டி (24), ராபின்ஸ்டன் (41), பிரசாந்த் (56), ஆரோக்கியம் (58), யோபு (15), பெட்ரிக் நாதன் (37), ஜான் இம்மரசன் (38), அருள் பிரிட்சன் (29), நிஷாந்த் (25), பரலோக மேட்டன் வினித் (24), அந்தோணி லிஸ்பன் (24) ஆகிய 14 மீனவர்களையும் சிறைபிடித்தனர்.


மேலும் அவர்களிடம் இருந்த மீன்பிடி உபகரணங்களை சேதப்படுத்தியதோடு, மீனவர்கள் கடலில் விரித்திருந்த வலைகளையும் அறுத்து வீசினர். தொடர்ந்து 14 மீனவர்களும் இலங்கையில் உள்ள மன்னார் மீன்வளத்துறை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர் இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

தமிழக மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி, ராமேசுவரம் தங்கச்சி மடம் பகுதியில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம் மற்றும் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், கைது செய்ய மீனவர்கள் 14 பேரும் இலங்கை மன்னார் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிமன்றம், 14 பேரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு மீனவரும் தலா ரூ. 50 ஆயிரம் அபராதம் செலுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மீனவர்கள் விடுதலை செய்யப்பட்ட செய்தி, ராமேசுவரம் மீனவர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# நெல்லை கொலை சம்பவம்: தமிழக அரசுக்கு ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை,டிச.21

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் மாவட்ட நீதிமன்றம் உள்ளது. இந்த நீதிமன்றத்திற்கு தினமும் ஏராளமானோர் வழக்கு விசாரணைக்காக வந்து செல்கின்றனர். இந்த நிலையில், இன்று காலை கீழநத்தம் பகுதியைச் சேர்ந்த மாயாண்டி என்பவர் ஒரு வழக்கு விசாரணையில் ஆஜராக வந்துள்ளார்.

அப்போது நீதிமன்ற வளாகத்தில் நீதிபதி வருகைக்காக காத்திருந்தபோது திடீரென 4 பேர் கொண்ட கும்பல் ஒன்று மாயாண்டியை சுற்றி வளைத்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக கும்பலிடம் இருந்து தப்பித்து நீதிமன்ற வளாகத்தில் ஓடினார். இருப்பினும் அந்த கும்பல் மாயாண்டியை துரத்தி சென்றது.

நீதிமன்ற வளாகத்தில் இருந்து வெளியே வாசலுக்கு வந்தபோது மாயாண்டியை அந்த கும்பல் சரமாரியாக வெட்டியது. இதில் முகம், கை, கால் உள்ளிட்ட இடங்களில் பலத்த வெட்டு காயம் ஏற்பட்டு ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே மாயாண்டி சரிந்து விழுந்து உயிரிழந்தார். இதையடுத்து அந்த கும்பல் காரில் ஏறி தப்பிச் சென்றது. அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் மாயாண்டியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த கொலை தொடர்பாக வழக்குப்பதிவு செய்து ஒருவரைப் பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சென்னை ஐகோர்ட்டு தாமாக முன் வந்து இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியன் மற்றும் குமாரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் காவல்துறைக்கு பல்வேறு கேள்விகளை முன் வைத்தனர்.

அதில் "நெல்லை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் போலீசார் பாதுகாப்பு பணியில் இருந்தும் கொலை நடந்துள்ளது. இதனை ஏன் காவல்துறை தடுக்கவில்லை? ஒரு குற்றம் நடைபெறும் பொழுது அதை தடுக்க முயல வேண்டுமே தவிர, குற்றம் நடந்த பிறகு குற்றவாளிகளை தேடுகிறோம் என்று சொல்வதில் என்ன நியாயம் உள்ளது' என்றார். அப்பொழுது அரசு தரப்பு வழக்கறிஞர், 'இந்த கொலை சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றவர்களை தேடி வருவதாகவும் தெரிவித்தார்.

அதற்கும் பல்வேறு கேள்விகளை நீதிபதிகள் முன் வைத்தனர். 'சம்பவ இடத்தில் இருந்த காவல்துறையினர் குற்றவாளிகள் தப்பி ஓடாமல் அவர்களை முட்டிக்கு கீழே காலில் சுட்டுப் பிடித்திருக்கலாம். இல்லையென்றால் அவர்கள் தப்பிச் செல்ல முயன்ற வாகனத்தின் டயர்களை சுட்டு நிறுத்தி இருக்கலாம். அப்படி செய்திருந்தால் சம்பவ இடத்திலேயே குற்றவாளிகளை அங்கேயே கைது செய்திருக்கலாம். தமிழகம் முழுவதும் மாவட்ட நீதிமன்றங்கள் அனைத்திலும் காவல்துறையினர் பாதுகாப்பு வழங்க வேண்டும் என நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. அது கடைபிடிக்கப் பட வேண்டும். நாளை நீதிபதிக்கும் இதேபோன்ற ஒரு நிலை ஏற்பட்டால் நீங்கள் இப்படித்தான் வேடிக்கை பார்ப்பீர்களா?' என கேள்வி எழுப்பினர்.

'இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவதை ஏற்றுக் கொள்வதாக இல்லை. எனவே இந்த வழக்கை நாளை பிற்பகல் 4.30 மணிக்கு ஒத்திவைப்பதாகவும், இது குறித்து விரிவான அறிக்கையை தமிழக அரசு சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

# ராமகிருஷ்ண மிஷன் சார்பில் ரூ. 1,292.03 கோடி வளர்ச்சி பணிகள்



நாமக்கல், டிச.21

உலகளாவிய ராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடம் சார்பில் 2023 2024 கல்வியாண்டில் சுமார் ரூ. 1,292.03 கோடி மதிப்பில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என கோவை, பெரியநாயக்கன் பாளையத்தில் உள்ள ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயா கல்வி நிறுவனங்களின் பொது செயலர் சுவாமி சுவீதானந்தர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

ராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடத்தின் பொது செயலாளர் சுவாமி சுவீதானந்தர் முன் னிலையில் 115 ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, 2023 2024 ஆம் கல்வியாண்டில் உலகம் முழுவதும் இந்த அமைப்பின் மூலம் நடத்தப்படும் பள்ளி முதல் கல்லூரி வரை பயிலும் 2.87 லட்சம் ஏழைக் குழந்தைகள், பெண் குழந்தைகள், மாணவர்களுக்கு சுமார் ரூ. 712.89 கோடி செலவிடப்பட்டது.

இந்தியாவின் பல்வேறு இடங்களில் ராமகிருஷ்ணா இயக்கத்தின் சார்பில் செயல்படும் மருத்துவமனை, கிராமப்புற மருந்தகங்கள், நடமாடும் மருத்துவமனைகள் வாயிலாக சுமார் ரூ 496.70 கோடி செலவிடப்பட்டது, இதன் மூலம் சுமார் 79.28 லட்சம் பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். கிராமப்புற ஊரக மேம்பாட்டுக்கென கிராமப்புற நீராதார திட்டங்கள், சுகாதாரத் திட்டங்கள், வேளாண் திட்டங்களுக்காக சுமார் ரூ 18.31 கோடி செலவிடப்பட்டதன் மூலம் 2.40 லட்சம் பொது மக்கள் பயனடைந்துள்ளனர்.

இதில் கிராமங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், கிராம மாணவரக்ளுக்கான கல்வி சேவைகளை, விவசாயிகளுக்கான சேவைகள், மருத்துவ சேவைகள் செய்யப்பட்டன.

பொது நலன் சார்ந்த பணிகளுக்கு 56.34 கோடி செலவிடப்பட்டது. இதில் மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை, மகளிருக்கும் தையல் இயந்திரங்கள், மாற்று திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள், படுக்கை விரிப்புகள், ரேஷன் பொருட்கள் என்று பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்யப்பட்டன. இதன் மூலம் 29.07 லட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர்.

புயல்களால் பாதிப்பு, தீ விபத்துக்கள், வெள்ள நிவாரண உதவிகள் என இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 8.56 கோடி செலவிடப்பட்டது. மேலும் இதில் 5.23 லட்சம் மக்கள் பயனடைந்தனர். புயல் மற்றும் வெள்ள காலங்களில் மக்களுக்கு தேவையான ரேஷன் பொருட்கள், சமைத்த உணவுகள், கை கிளவுஸ்கள், உணவு பொருட்கள் ஆகியவை இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடத்தால் வழங்கப்பட்டது.

மேற்கு வங்கத்தில் இந்த நிறுவனம் ஆற்றிய சேவைக்கு மேற்கு வங்காள ஆளுனரிடமிருந்து 'ஆளுநர் விருது' பெற்றது. மேலுல் அருணாச்சல மாநில விருது இந்த நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டது.

ராமகிருஷ்ண மிஷன் புதிய கிளைகள் திருமுக்கூடல், ஹரியானா குருகிராம், அசாமில் கருபேடிய, மகாராஷ்டிராவில் சக்வார் உள்ளிட்ட 6 இடங்களில் துவங்கி நடைபெற்று வருகிறது. மேலும் உலகம் முழுவதும் 24 நாடுகளில் 96 மையங்களின் மூலம் பலவித சேவைகளுடன் வேதாந்த தத்துவத்தை ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷன் போதித்து வருகிறது என்று அவர் கூறினார். ராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடத்தின் சேவைகளை மேற்கொள்வதற்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

# மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து அரியலூரில் ரெயில் மறியல் போராட்டம்: விசிகவினர் 22 பேர் கைது



அரியலூர், டிச.21

மாநிலங்களவையில், சட்ட மேதை அம்பேத்கர் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, அரியலூர் மாவட்ட விசிக சார்பில் நேற்று ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. முன்னதாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் அங்கனூர் சிவா தலைமையில் விசிகவினர் ரயில் நிலைய முன்பு திரண்டு மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து

சட்ட மேதை அம்பேத்கர் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்த உள்துறை அமைச்சர் அமித்ஷா தனது பதவியை ராஜிநாமா செய்ய வேண்டும். இல்லையென்றால் பிரதமர் மோடி அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என கோஷமிட்ட வாரே ரயில் நிலையத்திற்குள் நுழைய முற்பட்டனர். உடனே அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காவல் துறையினர் மறியலில் ஈடுபட்ட 22 பேரை தடுத்து நிறுத்தி கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்திருந்தனர். பின்பு கைது செய்யப்பட்ட அனைவரும் மாலையில் அனைவரையும் காவல் துறையினர் விடுவித்தனர்.

# கோவை புரோஜோன் மாலில் முதன் முறையாக நகரின் மிக உயரமான இன்டோர் கிறிஸ்துமஸ் ட்ரீ அறிமுகம்



கோயம்புத்தூர், டிச.21

கோயம்புத்தூர் புரோஜோன் மாலில் முதன் முறையாக நகரின் மிக உயரமான இன்டோர் கிறிஸ்துமஸ் ட்ரீ அறிமுகம்.

இது குறித்து புரோஜோன் மால் மைய இயக்குனர் திரு. அம்ரிக் பனேசர், செயல்பாட்டுத் தலைவர் முசாமில் ஜிங்ரு, மார்க்கெட்டிங் தலைவர் திரு. பிரிங்ஸ்டன் சகாய நாதன், தொழில்நட்ப தலைவர் திரு. எஸ்வந்த் ராவ் கூறியதாவது

ஒவ்வொரு விழாக்காலங்களிலும் கோவை மக்களுக்காக பல பிரம்மாண்டங்களை அறிமுகப்படுத்தும் சரவணம்பட்டி புரோஜோன் மால் இந்த வருடம் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விழாக்காலங்களை முன்னிட்டு புரோஜோன் எவெரி பியரி கிறித்துமஸ் என்ற தலைப்பில் கோயம்புத்தூரில் முதல் முறையாக நகரின் மிக உயரமான கிறிஸ்துமஸ் ட்ரீ புரோஜோன் மால் மெயின் ஏட்ரியம் யில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மால் முழுவதும் வண்ண வண்ண விளக்குகளாலும் மற்றும் அலங்காரத்துடன் கூடிய செல்ஃபி ஜோன் களும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விழாக்கோலங்கள் வருகிற டிசம்பர் 20 ஆம் தேதி முதல் ஜனவரி 5 ஆம் தேதி கொண்டாடப்படவுள்ளது. மேலும், இந்த விடுமுறை நாட்களில் குழந்தைகளுக்கான வியப்பூட்டும் பல கலை நிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடத்தப்படவுள்ளது.

வருகிற டிசம்பர் 20 ஆம் தேதி கலைநிகழ்ச்சிகளுடன் கூடிய கிறிஸ்துமஸ் ட்ரீ அறிமுக விழாவும், 21 ஆம் தேதி புரோஜோன் ஜங்கிள் ஜாய்ஸ், குழந்தைகளுக்கான பேஷன் ஷோ, டிராயிங் மற்றும் பெயிண்டிங் போட்டி, 22 ஆம் தேதி புரோஜோன் சான்டா கிட்ஸ் பலூன் ரன் சீசன் 2 1 கிலோ மீட்டர் ஓட்டபந்தயம், 23 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை புரோசோன் கரோல் ஃபெஸ்டாரு பேண்ட் செயல்திறன் நிகழ்வு மற்றும் 27 ஆம் தேதி முதல் 29 ஆம் தேதி வரை ஒரு பிரம்மாண்ட உணவு திருவிழா மற்றும் டிசம்பர் 31 ஆம் தேதி இரவு அன்று 2025 புத்தாண்டை டிஜே நைட், லைவ் இன் கான்சர்ட், டிஜே பிளாக், ஷா மிவிசால், மானசி பேச்சலர் பிராண்ட் ஆகியோர் பங்குபெறும் செலிபிரிட்டி நைட் புத்தாண்டு இரவு கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளது. மேலும் குழந்தைகள் பங்கேற்கும் போட்டிகளுக்கு ரூ 2 லட்சம் மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்பட உள்ளது.

மேலும் விழாக்கால சலுகையாக மாலில் உள்ள 100 க்கும் மேற்பட்ட பிராண்டுகளின் மீது 50 சதவீத தள்ளுபடி விற்பனையும் நடைபெறவுள்ளது. இந்த கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டை விடுமுறை காலங்களில் உங்கள் குழந்தைகளுடன் கொண்டாட புரோஜோன் மாலுக்கு வாருங்கள். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# சிவகங்கை மாவட்ட நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 67 வளர்ச்சி திட்டப் பணிகள்: செய்தியாளர் பயணத்தின்போது மாவட்ட கலெக்டர் ஆய்வு



சிவகங்கை, டிச.21

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து, மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித், செய்தியாளர்களுடன் கள ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், மக்கள் நலத்திட்டங்கள் மட்டுமன்றி பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்திடும் பொருட்டு, சிவகங்கை மாவட்டம் முழுவதும் அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சி பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2021-22 முதல் 2024-25ஆம் நிதியாண்டுகளின் கீழ் பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, 2021-22ஆம் நிதியாண்டிற்கென கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.319 இலட்சம் மதிப்பீட்டில் செக்கடி ஊரணி புனரமைத்தல் பணி, நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டுதல் பணியும், தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.61.24 இலட்சம் மதிப்பீட்டில் பொதுக்கழிப்பறை மற்றும் சமுதாயக் கழிப்பறை கட்டுதல் பணிகளும், 2 15 வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.135 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பகிர்மானக் குழாய்கள், வளமீட்பு மையம், வார்டு எண் 11ல் நகர்ப்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் மற்றும் சாலைகள் அமைக்கும் பணிகளும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ரூ.84.44 இலட்சம் மதிப்பீட்டில் சாலையோர வியாபாரிகளுக்கு தள்ளுவண்டிகள் வழங்கியும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.57.50 இலட்சம் மதிப்பீட்டில் ஊரணி புனரமைத்தல் மற்றும் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்கும் பணிகளும், 2022-23 ஆம் நிதியாண்டிற்கென கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.779 இலட்சம் மதிப்பீட்டில் செட்டி ஊரணி, குண்டூரணி, பேருந்து நிலையம் புனரமைத்தல் மற்றும் புதிதாக வாரச்சந்தை அமைக்கும் பணிகளும், தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.43 இலட்சம் மதிப்பீட்டில் பொருட்கள் வைக்கும் அறை கட்டிட பணி, 15 வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.116.98 இலட்சம் மதிப்பீட்டில் மற்றும் வாகனங்கள் வாங்குதல், நகர்ப்புற காடுகள் மற்றும் தார் சாலைகள் அமைக்கும் பணிகளும், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.208 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலைகள் அமைக்கும் பணிகளும், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.26 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக பூங்கா அமைக்கும் பணிகளும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.31.20 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிகளும், 2023 24 ஆம் நிதியாண்டிற்கென கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.554 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலைகள் மற்றும் புதிதாக தினசரி சந்தை அமைக்கும் பணிகளும், 15 வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.123 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலைகள் மற்றும் வார்டு எண் 18ல் நகர்ப்புற சுகாதார மைய கட்டிடம் அமைக்கும் பணிகளும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் நோயாளிகளுடன் கூடிய பாதுகாவலர் தங்குவதற்கு கட்டிடம் கட்டும் பணிகளும், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து தரமான முறையில் முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என கலெக்டர் ஆஷா அஜித் தெரிவித்தார்.



மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் சங்கீதா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் உடன் உள்ளார்.

# ஹாலிவுட் இயக்குனர் கிறிஸ்டோபர் நோலனுக்கு சர் பட்டம் வழங்கி கவுரவித்த இங்கிலாந்து மன்னர்



பிரபல ஹாலிவுட் இயக்குனர்களில் ஒருவர் கிறிஸ்டோபர் நோலன். இவரது இயக்கத்தில் கடைசியாக வெளியான படம் 'ஓப்பன் ஹெய்மர்'. ஓப்பன் ஹெய்மர் கதாபாத்திரத்தில் சிலியன் மர்பி நடித்த இப்படம் 7 ஆஸ்கர் விருதுகளை அள்ளியது. கிறிஸ்டோபர் நோலன் தனது 13வது படத்தை இயக்கி வருகிறார்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவரான இவருக்கு அமெரிக்கா தங்கள் நாட்டு குடியுரிமையை வழங்கியுள்ளது. பல்வேறு துறைகளில் சாதனை புரியும் அல்லது நாட்டுக்காக சேவை செய்யும் தனி நபர்களுக்கு இங்கிலாந்து மன்னர் அல்லது ராணியால் 'சர்' பட்டம் வழங்கப்படுகிறது. இயக்குனர் நோலனின் பெரும்பாலான படங்களுக்கு அவரது மனைவி தயாரிப்பாளராக இருந்துள்ளார்.

இந்நிலையில் திரைத்துறையில் இவர்களின் சாதனைகளைக் கருத்தில் கொண்டு இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸ் நோலனுக்கு 'சர் பட்டத்தை' வழங்கியுள்ளார். இங்கிலாந்தின் பக்கிங்ஹாம் அரண்மனையில் 'சர்' பட்டம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இது தொடர்பாக இங்கிலாந்து அரச குடும்பத்தின் அதிகாரபூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "நோலன் மற்றும் அவரது மனைவி எம்மா தாம்ஸன் 'சர்' பட்டத்தால் கவுரவிக்கப்படுகிறார்கள். 'தி டார்க் நைட்', 'ஓப்பன்ஹைமர்' போன்ற படங்களை இணைந்து தயாரித்து திரையுலகில் சிறப்பான பங்களிப்பை செலுத்தியதற்காக இந்த தம்பதியினருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த சந்திப்பின்போது, நோலன் இயக்கத்தில் கடைசியாக வெளியான 'ஓப்பன்ஹைமர்' படம் குறித்த தனது பாராட்டை இளவரசர் சார்லஸ் தெரிவித்தார்.

இயக்குநர் கிறிஸ்டோபர் நோலனின் 13வது படம் 2026ம் ஆண்டு ஜூலை 17ம் தேதி ஐமேக்ஸ் பார்மெட்டில் திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# விடுதலை 2 படத்தின் சிறப்பு காட்சிக்கு தமிழக அரசு அனுமதி




நடிகர் விஜய் சேதுபதி நடிப்பில் உருவாகியுள்ள 'விடுதலை 2' திரைப்படம் நாளை வெளியாகிறது. இயக்குனர் வெற்றிமாறன் இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளியான திரைப்படம் 'விடுதலை'. இந்த படத்தில் நடிகர் சூரி கதாநாயகனாக நடிக்க அவருடன் இணைந்து விஜய் சேதுபதி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இந்த திரைப்படத்தின் பாடல்கள், டிரெய்லர் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றன. தணிக்கை குழு இப்படத்திற்கு 'ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளது.

'விடுதலை 2' திரைப்படம் நாளை வெளியாகும் நிலையில் ரசிகர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 'விடுதலை 2' திரைப்படத்தின் டிக்கெட் முன்பதிவு கடந்த இரு தினங்களுக்கு முன் தொடங்கியது. இந்நிலையில், 'விடுதலை 2' படத்தின் சிறப்பு காட்சிக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. தமிழக திரையரங்குகளில் ஒரு நாளைக்கு 4 காட்சிகள் வெளியாக இருந்தநிலையில், நாளை ஒருநாள் கூடுதலாக ஒரு சிறப்புக்காட்சி திரையிட தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, நாளை காலை 9 மணிக்கு சிறப்பு காட்சி திரையிடப்படுகிறது.

# 'கூரன்' திரைப்படத்திற்கு அரசு வரிவிலக்கு வழங்க வேண்டும் மேனகா காந்தி

ஒரு நாயை மையமாக வைத்து உருவாகி இருக்கும் திரைப்படம் 'கூரன்'. இத்திரைப்படத்தில் எஸ்.ஏ.சந்திரசேகரன், ஒய்.ஜி.மகேந்திரன்,சத்யன்,பாலாஜிசக்திவேல்,ஜார்ஜ்மரியான்,இந்திரஜாரோபோசங்கர்மற்றும்பலர்நடித்திருக்கிறார்கள். இப்படத்தை அறிமுக இயக்குநர் நிதின் வேமுபதி இயக்கியுள்ளார்.

விலங்குகளை மையப்படுத்தி எடுக்கப்பட்ட பல படங்கள் தமிழ் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. அந்த வகையில் ஒரு நாய் தனக்கு நியாயம் கிடைக்க நீதிமன்றம் சென்று போராடுவது போல ஒரு வித்தியாசமான கதைக்களத்தில் இப்படம் அமைக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் பயிற்சி பெற்ற ஜான்சி என்ற போலீஸ் நாய் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறது. 'கூரன்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நேற்று சென்னையில் நடைபெற்றது. விழாவில், சிறப்பு விருந்தினராக விலங்குகள் உரிமைகள் செயல்பாட்டாளர் மேனகா சஞ்சய் காந்தி கலந்து கொண்டார். திரைப்படத்தின் இசையை வெளியிட்டு விட்டு, விழாவில் அவர் பேசும் போது, " திரைப்படத்தில் சிறிய திரைப்படம் என்று எதுவும் இல்லை. இது பெரிய கருத்தை, சிந்தனையை முன் வைத்து எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படம் அனைத்து உயிரினங்களும் ஒன்று என்று சொல்கிறது. உயிரினம் ஒவ்வொன்றும் சோகத்தை உணர்கிறது, மகிழ்ச்சியை உணர்கிறது, பயத்தை உணர்கிறது. வாழ விரும்புகிறது. அமைதியான வாழ்க்கை வாழ விரும்புகிறது. விலங்குகள் அனைத்திற்கும் ஒருமொழி உள்ளது. அவை அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்கின்றன. அவை அனைத்தையுமே மனிதர்களைப் புரிந்து வைத்துள்ளன. ஆனால் நாம்தான் அவைகளைப் புரிந்து கொள்வதில்லை. விலங்குகளின் மகிழ்ச்சியையும், வலிகளையும் பார்க்கும்போது, அது நம்முடையதாக உணர வேண்டும். நாம் அனைவரும் ஒன்று என்பதைத்தான் இந்தப் படம் முழுமையாக வெளிப்படுத்துகிறது. இந்தப் படம் நாயின் உரிமை வழக்கு பற்றிப் பேசுகிறது. அனைத்து உயிரினங்களும் ஒன்று என்பதை நாம் உணர்ந்து அங்கீகரிக்க வேண்டும். 'கூரன்' திரைப்படத்திற்கு அரசு வரிவிலக்கு வழங்க வேண்டும் " என்றார்.

# விமான நிலையத்தில் பெண் பத்திரிகையாளரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட விராட்.. என்ன நடந்தது..?



இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் இந்தியாவும், 2வது போட்டியில் ஆஸ்திரேலியாவும் 3வது போட்டி சமனிலும் முடிவடைந்த நிலையில் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 4வது போட்டி வரும் 26ம் தேதி மெல்போர்னில் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய அணியினர் பிரிஸ்பேனிலிருந்து மெல்போர்ன் புறப்பட்டு சென்றனர்.

அந்த சமயத்தில் விராட் கோலி விமான நிலையத்தில் ஒரு பெண்பத்திரிகையாளருடன்வாக்குவாதத்தில்ஈடுபட்டவீடியோ ஒன்றுஇணையத்தில்வைரலாகிவருகிறது.தனதுகுழந்தைகளை புகைப்படம் எடுத்ததாக கருதி விராட் கோலி கோபமடைந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் அங்கு என்ன நடந்தது என்பது குறித்து பத்திரிகையாளர் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அது குறித்து வெளியான தகவலின் படி, மெல்போர்ன் விமான நிலையத்தில் விராட் கோலி தன் குடும்பத்தை நோக்கி கேமரா இருந்ததும், தனது குழந்தைகளை போட்டோ எடுத்ததாக கருதி கோபம் அடைந்துள்ளார்.

மேலும் "எனது குழந்தைகளுக்கும், எங்களுக்கும் கொஞ்சம் தனியுரிமை தேவை. எனவே எனது அனுமதி இல்லாமல் அவர்களை புகைப்படம் எடுக்க முடியாது" என்று கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

பின்னர் உங்கள் குடும்பத்தை புகைப்படம் அல்லது வீடியோக்களை எடுக்கவில்லை என்று பத்திரிகையாளர் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட விராட் கோலி அங்கிருந்து புறப்பட்டு சென்றுள்ளார்.

# இந்திய டெஸ்ட் வரலாற்றில் மாபெரும் உலக சாதனை படைத்த பும்ரா

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 'பார்டர்கவாஸ்கர்' கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியாவும், 2வது போட்டியில் ஆஸ்திரேலியாவும் வெற்றி பெற்றிருந்தன. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3வது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள காபா ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இந்த போட்டி முழுவதும் மழையால் பெருமளவு பாதிக்கப்பட்டது. இத்தகைய மழை பாதிப்புக்கு இடையே நடைபெற்ற இந்த போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ரோகித் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 445 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக டிராவிஸ் ஹெட் 152 ரன்களும், ஸ்டீவ் சுமித் 101 ரன்களும் குவித்தனர். இந்தியா தரப்பில் அதிகபட்சமாக பும்ரா 6 விக்கெட்டுகள் அள்ளினார். பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 78.5 ஓவர்களில் 260 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக கேஎல் ராகுல் 84 ரன்களும், ஜடேஜா 77 ரன்களும் அடித்தனர். ஆஸ்திரேலியா தரப்பில் கம்மின்ஸ் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனையடுத்து 185 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை ஆடிய ஆஸ்திரேலியா 18 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 89 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. இந்திய தரப்பில் பும்ரா 3 விக்கெட்டும், முகமது சிராஜ், ஆகாஷ் தீப் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர். இதன் மூலம் இந்தியாவுக்கு 275 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 2.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 8 ரன் எடுத்திருந்தபோது போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஜெய்ஸ்வால், லோகேஷ் ராகுல் தலா 4 ரன்னுடன் களத்தில் இருந்தனர். தொடர்ந்து கனமழை கொட்டியதால் மேற்கொண்டு ஆட்டத்தை தொடர முடியவில்லை. இதனால் இந்த டெஸ்ட் டிராவில் முடிவதாக அறிவிக்கப்பட்டது.

முன்னதாக இந்திய அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான பும்ரா இந்த போட்டியில் கைப்பற்றிய 9 விக்கெட்டுகளையும் (2 இன்னிங்ஸ்களிலும்) சேர்த்து இதுவரை ஆஸ்திரேலிய மண்ணில் 53 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளார்.

இதன் மூலம் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறிப்பிட்ட ஒரு வெளிநாட்டில் அதிக விக்கெட்டுகள் கைப்பற்றிய பந்துவீச்சாளர் என்ற மாபெரும் உலக சாதனையை பும்ரா படைத்துள்ளார். இதற்கு முன்னர் கபில் தேவ் (ஆஸ்திரேலியாவிலும்) மற்றும் இஷாந்த் சர்மா (இங்கிலாந்திலும்) தலா 51 விக்கெட்டுகள் கைப்பற்றியதே சாதனையாக இருந்தது. தற்போது அதனை தகர்த்துள்ள பும்ரா 53 விக்கெட்டுகளுடன் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

அந்தபட்டியல் 1. பும்ரா ஆஸ்திரேலியா 53 விக்கெட்டுகள் 2. கபில் தேவ் ஆஸ்திரேலியா 51 விக்கெட்டுகள் 2. இஷாந்த் சர்மா இங்கிலாந்து 51 விக்கெட்டுகள் 3. அனில் கும்ப்ளே ஆஸ்திரேலியா 49 விக்கெட்டுகள்

4. முகமது ஷமி இங்கிலாந்து 42 விக்கெட்டுகள்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.